[8th August 1963

(i) one at Tirumazbisai village under the control of the Department of Industries; and (ii) the other at Poonamallee under the control of the Housing Board?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் செங்கல் தொழிற்சாலைகள் எப்போது உற்பத்தியைத் தொடங்கும் என்று கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அயல்நாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இயந்திரங்கள் வந்தவுடன் அவற்றைப் பொறுத்தி உடனடியாக வேலை தொடங்க வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் முன்பு கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள், அவசியமில்லை என்று கூறினார்கள். கட்டுகிற கட்டடங்கள் உறுதியாக இருப்பதை முன்னிட்டாவது மற்ற ஜில்லாக்களில் கூட சட்டத்தை அமல் நடத்தாவிட்டாலும் செங்கல்லின் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் உதவி செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தவிதமான உதவி வேண்டுமென்று கோரினால் அதை சர்க்கார் பரிசிலனை செய்யும்.

Central and State Co-operative Institutions

* 56 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to eliminate the individual shareholders from the Central and State institutions within the co-operative fold; and

(*b*) if so, the reasons therefor?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தியடைந்திருப்பதால், இந்த மத்தியச் சங்கங்களாக அமைகிற கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளிலிருந்து அனுபவமும் திறமையும் உள்ள நபர்கள் கிடைப்பது தான் இதற்குக் காரணம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மத்திய சங்கங்களில் தனிப்பட்ட பங்குதாரர்கள் இருந்தால் மத்திய சங்கத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று அரசாங்கம் கருதுகிறதா? அதனால் தான் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறதா?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஆபத்து என்பதல்ல. ஆரம்ப காலத்தில் இதற்கு நல்ல ஆட்கள் தேவை என்ற முறையில் அவர்களை நியமித்து வந்தார்கள். இப்

8th August 1963]

போது எல்லோரும் அதில் நல்ல முறையில் பழக்கப்பட்டு அனுபவம் பெற்றிருப்பதால் அதிலுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

Scientific and Industrial Exhibitions

* 57 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Indusutries be pleased to state whether there is any proposal to set up a permanent scientific and industrial exhibition at each district headquarters?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

திரு. கே. ஏ. மதியழகன்: தொழில் வளர்ச்சி, விஞ்ஞானம் ஆகியவைகளில் அரசாங்கம் காட்டுகிற அக்கறையை விருத்தி செய்வதன் அவசியத்தை முன்னிட்டு இம்மாதிரி அமைப்பது அவசியம் என்று கருதவில்லையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது தேசத்தில் பல நாஷனல் லாபரட்ரீஸ் இருக்கின்றன. சாதாரணமாக 'ஸயன்டிபிக் அன்ட் இண்டஸ்ட்ரியல் ரிசர்ச்' முதலியவை செய்ய கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். அதனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைக்கமுடியாது. எக்ஸிபிஷன் வைக்கலாம். நம்முடைய இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டில் சேல்ஸ் எம்போரியம் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்திருக்கிறோம். எந்தெந்த பண்டங்கள் நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகிறதோ அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

Schools for adults

* 58 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that sanction has already been accorded by the Government for the opening of adult schools in rural and urban areas during April, 1963; and

(b) if so, the reason for having ordered them to be stopped?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரியான பள்ளிகள் நாடெங்கும் திறக்கப்பட்டது. என் தொகுதியில் கூட இரண்டு பள்ளிகள் திறக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன. அதற்கு யார் காரணம் என்று நான் அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனி கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம். பொதுவாக இம்மாதிரி முதியோர் பள்ளி அமைப்பதற்கு மத்திய ஆட்சியினர் உதவி அளிப்பதாக கூறியிருக்கிறார்கள். எவ்வளவு உதவி அளிப்பார்கள் என்று அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. அது தெரிந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.